**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 42/2023** **நாள் 21.11.2025.**

**வாசா.1, திரு.குருவம்மாள்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 7ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நாங்கள் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகள் என்று சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகள் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி சுமார் 48 வருடம் ஆகிறது. அதுபோல் என் சகோதரியான 1ம்வாதிக்கு திருமணம் ஆகி 52 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். எனக்கு திருமணம்ஆனது முதற்கொண்டு நான் என் கணவர் வீட்டில் உத்தமபாளையத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சின்ன குருசாமி செட்டியாரின் தகப்பனார் பெயர் மாரியப்ப செட்டியார். மாரியப்ப செட்டியாருக்கு சிலம்ப செட்டியார் என்ற பெயரும் உள்ளது என்று சொன்னால் அப்படியில்லை. மாரியப்ப செட்டியாரின் அப்பா பெயர் தான் சிலம்ப செட்டியார். நான் சொல்வது தவறு என்றும் மாரியப்ப செட்டியாருக்கு சிலம்ப செட்டியார் என்ற பெயர் உள்ளது என்றும் இரண்டும் ஒரே நபர் என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் உண்மையில் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரராக இருந்திருந்தால் அவருடைய தகப்பனார் மாரியப்ப செட்டியார் உயிரோடு இருக்கும் போதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும்என்று சொன்னால் அப்படி எதுவும் பாகம் நடக்கவில்லை. வழக்கில் கண்ட சொத்துக்களும் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்துக்களும் ஆதியில் மாரியப்ப செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கண்ட சொத்துக்களை பொறுத்து பட்டாவில் கண்ட சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் மாரியப்ப செட்டியாருக்கும் சங்கரம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.2 மற்றும் 3ல் கண்ட சொத்துக்கள் மாரியப்ப செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த் வழக்கில் கண்ட சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் மாரியப்ப செட்டியாருக்கு பாத்தியமாக இல்லை என்று சொன்னால் அதுசரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் பெரிய குருசாமி செட்டியார் ம்றறும் சின்ன குருசாமி செட்டியார் ஆகியோர்களுக்கு இடையில் சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அப்படி நான் சொல்லவில்லை. சாட்சி தானாக பெரியகுருசாமி செட்டியார் மற்றும் சின்ன குருசாமி செட்டியாருக்கு இடையில் பாகம் பிரிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பாரா 3ல் " மாரியப்ப செட்டியார் – சங்கரம்மாள் தம்பதியினர் இறந்த பின்னர் மேற்படியார்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் பெரிய குருசாமி மற்றும் சின்ன குருசாமி இருவருக்கும் வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டு பின்னர் இருவரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட குடும்ப ஏற்பாட்டில் பிராது தபசில் சொத்துக்கள் எங்கள் தகப்பனார் சின்ன குருசாமி செட்டியாருக்கு கிடைக்கபெற்றது என்று நான் சொல்லியுள்ளேன் "என்று சொன்னால் அப்படி நான்

சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் மாரியப்ப செட்டியார் இறந்த பின்பு அவரதுவாரிசுகள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னாலும், பெரியகுருசாமி செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது போக சின்ன குருசாமி செட்டியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் நான் வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் அப்படியில்லை. அது போல் என்னுடைய வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் பிராது சொத்துக்கள் கூட்டாக தா்ன அனுபவிக்கப்பட்டு வந்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் நாங்கள் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரராக இருந்திருந்தால் பிராது சொத்தில் கூட்டாக அனுபவித்து இருந்தால் ஒவ்வொரு சர்வே எண்ணிலும் தனித்தனியாக நான்குமால்கள் குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்திருப்போம் என்று சொன்னால் என் அப்பா தான் இறக்கும் வரை விவசாயம் பார்த்து வந்தார் எங்களுக்கு திருமணம் ஆன பின்பும் என் அப்பா தான் விவசாயம் பார்த்து வந்தார். அது போல் சின்ன குருசாமி செட்டியாருக்கு நாங்கள் வாரிசுதாரராக இருந்திருந்தால் சின்ன குருசாமி செட்டியாருக்கு ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்ற விபரத்தை சொல்லி நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்போம் என்றும் அப்படி நாங்கள் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் நாங்க்ள சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகளாக இருந்தாலும் சின்ன குருசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இருந்து எங்களை உடமை நீக்கம் செய்யப்பட்டவர்கள் என்று விபரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. மாரியப்ப செட்டியார் உயிரோடு இருந்த காலத்திலேயே வழக்கு சொத்தை வாரிசுதாரர்களுக்கு அவர்பிரித்து கொடுத்துவிட்டார் என்றும் அததை மறைத்து நாங்கள்பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் அதுசரியல்ல. நாங்கள் பெரிய குருசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து தான் இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அதுசரியல்ல. எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அதுசரியல்ல. மாரியப்ப செட்டியாருக்கும் சங்கரம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நாங்கள் முழுமையாக சேர்த்திருப்பதால் பெரியகுருசாமி செட்டியாருக்கும் சின்ன குருசாமி செட்டியாருக்கும இடையில் பாகம் ஏற்படாமல் இருந்திருந்தால் தான் அவ்வாறு நாங்கள் சேர்த்திருக்க முடியும் என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பெரியகுருசாமி செட்டியாரின் வாரிசுதாரர்களை நாங்க்ளஇவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. சின்ன குருசாமி செட்டியா்ர உயிரோடு இருந்தபோதே அவரது வாரிசுதாரர்களுக்கு பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார் என்றால் அதுசரியல்ல. சின்ன குருசாமி செட்டியார் இறந்தது பற்றி தெரியும் ஆனால் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. 07.10.2007 ம் தேதியில் சின்ன குருசாமி செட்டியார் இறந்துபோனர் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசாக நாங்க்ளஇருந்திருந்தால் அவருடையை இறப்பு தேதி, மாதம், ஆண்டு பற்றி எங்களுக்கு தெரிந்திருக்கும் என்றும் தற்போது ஞாபமில்லை என்று சொல்வது ஏற்கும்படியாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்வது போல் பிராது சொத்தானது சின்ன குருசாமி செட்டியாரின் பொறுப்பில் இருந்திருந்தால் 12.03.2007 ம் ஆண்டு

கோபால்சாமி என்பவர் 3, 4 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்துக்கொடுத்திருக்க முடியாது என்றும் அவரால் எவ்வித உரிமைமாற்றமும் செய்திருக்க முடியாது என்று சொன்னால் அப்படியில்லை. சின்ன குருசாமி செட்டியார் உயிரோடு இருந்தபோதே அவரது வாரிசு தாரர்களுக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றும் அதுபோல் 1வது பிரதிவாதிக்கு 1ம்தபசிலில் 1ம் அயிட்ட சொத்தை பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார்என்றும் அதனால் 1ம்தபசிலில் 1ம் அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு சட்டப்ப்டியான பாத்திய அனுபவம் உள்ளது என்றுசொன்னால் அது சரியல்ல. அதன்படி 1ம்பிரதிவாதிக்கு 6ம்பிரதிவாதிக்கு சட்டப்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக உரிமை மாற்றம் (வாசாஆ.10)செய்ததும் சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் அது சரியல்ல. அதன் பின்னர் 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணப்படி (வசாஆ.8) 7ம் பிரதிவாதிக்கு பிராது 1ம்தபசிலில் 1ம் அயிட்ட சொத்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதுசரியல்ல. 7ம் பிரதிவாதி மாரிமுத்து என்பவர் 3ம் தரப்பினர் தான் . எனவே மாரிமுத்துவின் பெற்றோர்களும் அவரது வாரிசுதாரர்கள் பற்றியும் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரிதான். அதுபோல் 7ம் பிரதிவாதிக்கும் சின்ன குருசாமி செட்டியார் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். எனவே 7ம் எதிர்வாதியானவர் 3ம் தரப்பினர் என்பதால் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரர்கள் பற்றி அவருக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் அது சரிதான். பொதுவாக ஒரு சொத்தை கிரையம் வாங்கும் போது யார் பெயரில் சொத்துக்கான பத்திரம் உள்ளதோ அவருக்கு தான் அந்த சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.7ம் எதிர்வாதி வில்லங்கம் சரிபார்த்து ஆவணத்தின் அடிப்படையில் சட்டப்படி சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் 6ம் எதிர்வாதியிடமிருந்து சொத்தை அவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றும் அது சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் அவர்கிரையம் வாங்கியது எங்களுக்கு அப்போது தெரியாது. இந்த வழக்கில் கண்ட சொத்து அனைத்திற்கும் ஒரே மதிப்பு உடையது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் கூற்றுபடி சின்ன குருசாமி செட்டியாருக்கு 4 வாரிசுகள் இருக்கும் பட்சத்தில் 1ம் பிரதிவாதிக்கும், 2 முதல் 5 எதிர்வாதிகளின் தகப்பனாருக்கும் இந்த வழக்கு சொத்துக்களில் சரிபங்கு உள்ளது என்று சொன்னால் சின்ன குருசாமி செட்டியாரின் சொத்தில் சரிபங்கு உள்ளது என்றால் சரிதான் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் 1ம்பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு தானம் கொடுத்தது மூலம் அவரது சட்ட உரிமையை 6ம்பிரதிவாதிக்கு விட்டுக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது.அதன் படி 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு தகுந்த மறு பயன் பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுத்து , 7ம் பிரதிவாதிக்கும் சட்டஉரிமையை விட்டுக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. அதுபோல் 2 முதல் 5பிரதிவாதிகளும் 6ம் பிரதிவாதி செய்தகொடுத்த உரிமை மாற்றம் செய்து கொடுத்து சம்மதம் கொடுத்து சம்மத ஆவணம்செய்து கொடுத்த படியால் வாசாஆ.9 ஆவணப்படிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் பிராது 1வதுதபசில் 1வது அயிட்ட சொத்தை பொறுத்துஅவர்களது உரிமையை விட்டுகொடுத்துவிட்ார்என்றால் சரியல்ல. அதன்படிக்கு 7ம்பிரதிவாதி பிராது 1ம்தபசிலில் 1ம் அயிட்ட சொத்தைபொறுத்து கூட்டு உரிமையாளர் என்று சொன்னால அது சரியல்ல. உண்மையாகவே நாங்க்ள சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகளாக நிரூபித்தாலும் 1 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கில் கண்ட சொத்தில் 2/4 பங்கை பொறுத்து 7ம் பிரதிவாதி அதில் இருந்து 37 சென்ட் பங்கை பெற தக்கவர் என்றுசொன்னால் அது சரியல்ல. நாங்கள் சின்ன குருசாமி செட்டியாரின்

வாரிசுதாரர்கள் அல்ல என்றும் எனவே சின்னகுருசாமி செட்டியாரின் சொத்துப்பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. மாரியப்ப செட்டியார், சங்கரம்மாளுக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்தையும் சேர்த்து தாவா வழக்கு தாக்கல் செய்ய்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 21st day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.